


காஞ்சிபுரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்தியம், விழுப்புரம் தெற்கு மற்றும் கடலூர் கிழக்கு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல கூட்டம் (30.10.1025 – வியாழக்கழமை) அன்று காணொலி காட்சி மூலமாக நடைபெற்றது. வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், மண்டல பொறுப்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, மாவட்ட கழக செயலாளர்கள் க.சுந்தர், செஞ்சி.மஸ்தான், டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, டாக்டர் லட்சுமணன், சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மற்றும் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சீரான போக்குவரத்தினை ஏற்படுத்துவது தொடர்பாக

# மணப்பாக்கம் முதல் கெருகம்பாக்கம் வரையிலான சாலை ஆய்வு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் மேற்கொண்டார்!

சென்னை, நவ.1-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மணப்பாக்கம் முதல் கெருகம்பாக்கம் வரையிலான சாலையில் சீரான போக்குவரத்தினை ஏற்படுத்துவது தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கம் முதல் கெருகம்பாக்கம் வரையிலான சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, சீரான போக்குவரத்தினை ஏற்படுத்துதல் தொடர்பாக நேற்று (31.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, துறை சார்ந்த அலுவலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கம் ரிவர்வியூ அவென்யூ பிரதான சாலை முதல் குன்றத்தூர் வரையிலான சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இந்த போக்குவரத்து நெரிசலை களைந்து சீரான போக்குவரத்தினை ஏற்படுத்திடும் வகையில் அமைச்சர் அவர்கள் ரிவர்வியூ அவென்யூ பிரதான சாலை, மணப்பாக்கம் பிரதான சாலை, எம்.ஜி.சாலை, தர்மராஜபுரம் ஆகிய பகுதிகள் வரை இன்று நேரில் சென்று களஆய்வு மேற்கொண்டார்.

இதில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஏதுவாக சாலையில் உள்ள மின் கம்பங்களை அகற்றி மின் கேபிள்கள் அமைத்தல், போக்குவரத்திற்கு ஏற்றவகையில் சாலையினை அகலப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், மண்டலக் குழுத் தலைவர்என்.சந்திரன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, வருவாய்த் துறை, மின்துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இன்று நடைபெறுகிறது

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!



இராணிப்பேட்டை, நவ. 1-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க, அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (01.11.2025 - சனிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் A.K.சுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட தி.மு.க அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

நவம்பர் 3, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டம் வருகை குறித்து

வாக்காளர் சிறப்பு சுருக்க திருத்தம் (S.I.R) பணிகள் குறித்து

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

மேற்கண்டவாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவித்துள்ளார்.

### சைதை கிழக்கு பகுதியில், வட்ட வாரியாக

# பாக முகவர்கள், நிர்வாகிகள் கூட்டம்!

## பகுதி செயலாளர் இரா.துரைராஜ் அறிவிப்பு!

சென்னை, நவ.1-

சைதை கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சைதை கிழக்கு செயலாளர்13வது மண்டலக்குழு தலைவர் இரா.துரைராஜ். எம்சி முன்னிலை, வட்டக் கழக செயலாளர்கள் தலைமை, மேலிட பொறுப்பாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் ஆலோசனை வழங்குகிறார்.

நாளை 01.11.2025 மாலை 5 மணி முதல் 9 மணி வரை சைதை கிழக்கு பகுதிக்கு உட்பட்ட 8 வட்டங்களில் உள்ள பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் கூட்டம், சைதை கிழக்கு பகுதி செயலாளர்13வது மண்டலக்குழு தலைவர் அண்ணன் திரு.இரா.துரைராஜ்.எம்சி அவர்கள் முன்னிலையிலும், வட்ட கழக செயலாளர்கள் தலைமையில் நடைபெற உள்ளது! இக்கூட்டத்தில் சைதை தொகுதி மேலிட பொறுப்பாளர் திரு. கே.எஸ். ரவிச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குகிறார்.

இன்று (01.11.2025) 172 172அ மலை 56, 168168அ மாலை 67, 169169அ, மாலை 78, 170170அ மாலை 89 நடைபெறுகிறது.

மேற்கண்ட நேர அட்டவணைப்படி குறித்த நேரத்தில் அனைத்து பாக முகவர்களும், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பிற அணிகளின் நிர்வாகிகள் அனைவரும், அவரவர் வட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கேஎஸ்எஸ்எம்.சேக் சிக்கந்தர் பாட்சா அவர்கள் நத்தம் மத்திய ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால்;

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, நவம்பர் 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31.10.2025



சென்னை மேற்கு மாவட்ட திமுக தகவல் தொழில் நுட்ப அணி, இளைஞர் அணி மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகத்தின் சார்பில் நடைபெற்ற S.I.R. (என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி) ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும், வரும் 2026ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.




நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (31.10.2025) சென்னையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "மாவட்ட அளவிலான கார்பன் நீக்கத் திட்டங்களுடன் மாநில அளவிலான காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு காலநிலை மாற்ற ஆட்சி மாற்றக் குழு உறுப்பினர் மான்டெக்சிங் அலுவாலியா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியாசாகு, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் டாக்டர். ஜெயந்தி முரளி, வசுதா அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அலுவலர் ஸ்ரீனிவாஸ் கிருஷ்ணசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### வார்டு நிர்வாகிகள் முதல் மாநில நிர்வாகிகள் வரை கடுமையாக உழைத்து

# ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க சூளுரை ஏற்போம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!



சென்னை, நவ.1

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 31.10.25, வெள்ளிக்கிழமை, மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலை யத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: அ.வெற்றி அழகன், ஜோசப்சாமுவேல், ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எம். விஜயகுமார், கே.எஸ்.எம். நாதன், வரதன், என்.பி. எம். ஷேக் அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதிஎத்தி ராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: கூ.பி.ஜெயின், வே. வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர். தேர்தல் பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன் பி.முனியாண்டி, பி.எம்.யாழினி,

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா'தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, நந்தீஸ்வரன், சுரேஷ் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, எல். பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி. பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து. ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

**தீர்மானங்கள்**

**தீர்மானம் 1:**

கழக துணை அமைப்புச் செயலாளரும், திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ப. தாயகம்கவி அவர்களின் தாயார் திருமதி.சௌந்தரி அம்மாள் (வயது 97) அவர்கள் 27/10/2025 அன்று இயற்கையெய்தியதற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தும், அன்னாரை இழந்து வாடும் சட்டமன்ற உறுப்பினருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 2:**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதை தொடர்ந்து பெய்கின்ற கனமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரிகளையும் கால்வாய்களையும் நீர் வழிப் பாதைகளையும் ஆய்வு செய்தும், தூர்வாரியும், உபரி நீரை வெளியேற்றியும், முகத்துவார பகுதிகளை ஆய்வு செய்தும் மக்களை காக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் இக்கூட்டம் மனமார பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 3:**

மக்களின் வாக்குரிமையை பறிக்கும் S.I.R எனும் சதி வலையை பீகாரில் அரங்கேற்றியதைப் போல தமிழ்நாட்டிலும் அரங்கேற்ற என்னும் பா.ஜ.க.வின் சதி வலையை தடுப்பது குறித்து மாமல்லபுரத்தில் நடைபெற்ற வாக்குச்சாவடி பயிற்சி கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் கூறியது போல கருப்பு சிவப்புகாரர்கள் காவலுக்கு கெட்டிக்காரர்கள் என்பதை நிரூபிக்கும் வண்ணம் வார்டு நிர்வாகி முதல் மாநில நிர்வாகிகள் வரை ஒவ்வொருவரும் அவரவர் வாக்குச்சாவடி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எனும் வகையில் ஓய்வின்றி உழைத்து ஏழாவது முறையும் கழக ஆட்சி அமைக்க சூளுரை ஏற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., – கன்னிகை கோ. ஸ்டாலின் பங்கேற்பு!

# பெரம்பூர் வடக்கு பகுதி பாகமுகவர்கள், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்! பகுதி செயலாளர் அ.முருகன் அறிவிப்பு!

சென்னை,நவ.1-

பெரம்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிவிப்பு வருமாறு:

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் அறிவுறுத்தின்படி "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" SIR - வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த ஆலோசனைக் கூட்டம் நாளை 2.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு ஸ்ரீ ராமசாமி மஹால், முத்தமிழ் நகர், கொடுங்கையூர். (முத்துக் குமாரசுவாமி காலேஜ் எதிரில்) (எனது) பகுதிச் செயலாளர் அ.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஏ.ஜியாவுதீன், ஆர்.லீலாவேலு, எம். லதா, ஏ.செந்தூர்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு SIR வாக்காளர் தீவிர சீர்திருத்தம் பற்றி ஆலோசனை வழங்குகிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தேர்தல் தொகுதி பார்வையாளர் கன்னிகை கோ. ஸ்டாலின், பொதுக்குழு உறுப்பினர் பா.மதிவாணன் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆகவே பெரம்பூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாமன்ற உறுப்பினர் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பாக ஒருங்கிணைப்பாளர்கள் BLA2,BDA, BYA மற்றும் வழக்கறிஞர் அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழிகாட்டுதலின் பேரில், தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 7.11.2025 வெள்ளியன்று காலை 10.30 மணி அளவில், சேலம், "தீர்த்தமலை திருமண மண்டபத்தில்", சுற்றுலாத் துறை அமைச்சரும் - சேலம் மத்திய மாவட்டச் செயலாளருமான **ஆர்.இராஜேந்திரன்**, தலைமையில், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் **எஸ்.ஆர்.சிவலிங்கம்**, எம்.பி., - சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் **டி.எம்.செல்வகணபதி**, எம்.பி., ஆகியோர் முன்னிலையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : 1) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்; 2) கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள "தமிழ் மாணவர் மன்ற" உறுப்பினர் படிவம் ஒப்படைத்தல், 3) மாணவர் அணியின் ஆக்கப் பணிகள் - குறித்து.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்: 31.10.2025.